# சிறகடிக்கும் சிட்டுக்கள்



JPL
C13185

செ. அன்புராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

000111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 JUN 2020

# சிறகடிக்கும் சிட்டுக்கள்




KOHA
JPL

13185 CC

செ. அன்புராசா

276728

முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்

276728 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
398.8

| | |
|---|---|
| நூல் தலைப்பு | : சிறகடிக்கும் சிட்டுக்கள் |
| நூல் ஆசிரியர் | : செ.அன்புராசா |
| வெளியீடு | : முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் |
| முதற்பதிப்பு | : மார்கழி, 2016 |
| வடிவமைப்பு | : ஜெயந்த் சென்ரர் |
| அச்சுப்பதிப்பு | : யே.எஸ்.பிறின்ரஸ் |
| பதிப்புரிமை | : ஆசிரியர் |
| அட்டை ஓவியம் | : டொ.கிறிஸ்ரியன் ஒஸ்ரட் |
| பக்கங்கள் | : XII + 52 |
| விலை | : 200 ரூபா |

| | |
|---|---|
| Title | : Sirakadikkum Siddukkal |
| Author | : S.Anpurasa |
| Publisher | : Murunkan Muththamil Kalamandram |
| First Edition | : December, 2016 |
| Layout | : Jeyanth Centre |
| Printed by | : J.S Printers |
| Copy Right | : Author |
| Cover Art | : D.Christian Ostad |
| Pages | : XII + 52 |
| Price | : 200 Rs |

அன்புராசா, செ.
சிறகடிக்கும் சிட்டுக்கள் (சிறுவர் பாடல்கள்) / செ. அன்புராசா. - மன்னார் : முருங்கன் முத்தமிழ் கலாமன்றம், 2016. -
ப. 52 ; செமீ. 21.
ISBN 978-955-4609-01-3
I. 894.8111 டிவி 23 ii. தலைப்பு
1. சிறுவர் பாடல்கள் - தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
10 JUN 2020




பிஞ்சுவயதில்
வன்னியிலும், சிரியாவிலும்...
வஞ்சிக்கப்பட்ட
ஆயிரமாயிரம்
குஞ்சுகளுக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 JUN 2020

# முன்னுரை

எமது மண்ணின் கடந்த கால போர்க்காலத்தின் கசப்பான அனுபவங்கள் மக்களின் மனங்களிலே, குறிப்பாக இளையோர், சிறுவர்களின் மனங்களிலே ஒருவித வக்கிர உணர்வை ஏற்படுத்தி, அவர்களிடையே மென்போக்கை வேரறுத்து, வன்முறை போக்கிலான உணர்வுகளோடு அவர்களை நகர்த்துவதை இன்று நாம் காண்கின்றோம்.

அதையும் மீறி, சமகாலத்தில் பூதாகரமாக உருவெடுத்துள்ள அந்நிய கலாசார மோகம் மற்றும் நவீன விஞ்ஞான தொலைத்தொடர்பு சாதனங்களின் ஊடுருவல் போன்றவற்றால் பெரியோர் முதல் சிறியோர் வரை திசை மாறிப் போவதையும் நமது உயர் விழுமியங்கள் சிதைக்கப் படுவதையும் அறிந்தும் அறியாதவர்களாக - தெரிந்தும் தெரியாதவர்களாக நாம் வாழ்கிறோம்.

இந்த மனோநிலை மாற்றியமைக்கப்பட்ட மக்கள் மத்தியில் மனித விழுமியங்கள் - பண்பாடுகள் புத்துயிர் பெற நல்லவை பற்றிய சிந்தனைகளும் - மென்போக்கிலான வழிமுறைகளும் உளவியல் நீதியாக படிப்படியாக ஊட்டப் படவேண்டும்.

இதனாலேயே இன்று ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு கலைவடிவம் பயிற்றப்பட வேண்டும் என்று உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதற்கான ஓர் ஆரம்ப ஆயுதமாகவே நம் முன்னோர்கள் மழலைப் பருவத்திலிருந்தே மனித விழுமி யங்களை ஊட்டி வளர்க்கும் வகையில் மழலைப் பாடல்களையும், சிறுவர் இலக்கியங்களையும் மற்றும் சிறுவர் நீதிக்கதைகள் சார் நூல்களையும் அதிகளவில் ஆக்கிப் பயன்படுத்தினர்.

70களுக்குப் பின்னர் காலத்தில் மாற்றமும் நவீன விஞ்ஞான தொழிநுட்ப தொடர்பு சாதனங்களின் வருகையால் ஏற்பட்ட நுகர்வுக் கலாசாரமும் எமது மக்களின் மனங்களிலே மனிதம், மனித விழுமியங்கள் தொடர்பான சிந்தனைகளை படிப்படியாக சிதறடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர், பெரியோர், அறிஞர் மத்தியில் எதிர்கால சந்ததியை ஆரோக்கியமாக வளர்த்தெடுக்கும் சிந்தனையும் சிதைத்துக் கொண்டிருப்பதை நாம் அனுபவிக்கின்றோம்.

இந்த நிலையை மாற்றி நமது மழலைகள், சிறுவர் கள் மனங்களில் தூய சிந்தனைகளையும் - தூய வழிமுறை களையும் ஊட்டி நெறிப்படுத்தி, மனிதத்தின் புனிதத்தை உணர்த்தப்படவும் வேண்டும் என்ற உயரிய நோக்கோடு அருட்பணி செ.அன்புராசா அடிகளார் தொடங்கியுள்ள இந்த சிறுவர் இலக்கியப்பணி மனிதத்தையும், மனித விழுமி யங்களையும், நமது மண்ணின் பக்தி, கலை, பண்பாடு களையும் நேசிக்கும் அனைவராலும் வரவேற்று, வளர்க்கப்படும் என்பது எனது நம்பிக்கை.

தனது பேனா முனையால் அநீதிகளை சுட்டிக் காட்டி, சுட்டெரிந்து, நீதிக்குப் புத்துயிரூட்டும் பணியில் தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றும் அடிகளாரின் இப் புதிய சிறுவர் இலக்கியப்பணி, பல்வேறு வடிவங்களிலே நம் சிறுவர்களின் பிஞ்சு மனங்களிலே விதைக்கப்படும் நச்சு விதைகளை சுட்டெரிந்து, சுடரேற்றும் சூரியனாக ஒளிரும் என்ற நம்பிக்கையோடு அவர் பணி தொடர ஆசிக்கிறேன்.

**கவித்தென்றல் செ.அ.அழகராசா**

(யாழ். ரத்னா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

அன்புராசா அடிகளார் தமிழ்மொழி மீதும் சமூகத்தின் மீதும் பாசமும் பரிவும் கொண்டவர். இறை பணிக்குத் தம்மை அர்ப்பணித்துள்ள இத்துறவி, பழக இனியவர். உயர்ந்த இலட்சியக் கனவை வரித்துக் கொண்டவர். இளைய தலைமுறை நன்னெறியில் ஒழுகவேண்டும் என்ற அக்கறை உடையவர்.

பிள்ளைச் செல்வங்களை மனதில்கொண்டு அடிகள் புனைந்துள்ள பாக்களின் தொகுதியே 'சிறகடிக்கும் சிட்டுக்கள்.' இப்பாக்கள் இறை பற்றியும், தமிழ் பற்றியும், குடும்பம் பற்றியும், சமூகம் பற்றியும் பேசுபவை. ஒரு குழந்தையின் குதூகலத்தோடு ஆடு, மாடு, பூனை, எலி, நாய், கோழி, குஞ்சு முதலிய எல்லா ஜீவராசிகளோடும் உறவாடுபவை.

"காக்கை குருவி எங்கள் ஜாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்"

என்ற பாரதியின் கோஷத்தின் எதிரொலிகள் இவை.

'எண்ணும் எழுத்தும்' என்ற பாடல், கூட்டலோடு தமிழையும் புகட்டுவது; நினைவில் நிறுத்த இலகுவானது. இது போலவே, 'அகர முதல', 'வேண்டும்' இரண்டும் ஆத்திசூடி மரபில் அகர வரிசையில் நல்வழிகளைப் போதிப்பவை. அடிகள் இளந் தலைமுறையினருக்குச் சொல்லும் பொன்னான அறிவுரை: 'பொழுதுகளைப் பொன் செய்வோம்!' என்பது. இளைஞர்களில் எத்தனை பேர் சந்திகளில் கூடிநின்று வீண் பேச்சுப் பேசிப் பொழுது போக்குகின்றனர்!

பெருந்தெருக்கள் சீராக்கப்பட்டபின், பயணங்கள் இலகுவானதும் விரைவானதும் உண்மையெனினும் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளமையையும் காண்கிறோம். மதுபோதையில் வாகனம் ஓட்டுவோரால் பல விபத்துகள் ஏற்படுகின்றன.

வீதிகளில் விரைந்து வரும் ஊர்திகளை அவதானித்து, பிள்ளைகள் தம் பாதுகாப்பை உறுதிசெய்யவேண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்ற செய்தியை 'தவிர்ப்பீர்' என்றபாடல் சொல்கிறது:

"வீதிவழி நித்தம்வரும்
பேருந்து காண்பீர் - அது
போகும்வரை பொறுத்துநின்று
பாதையைநீர் கடப்பீர்!

தண்டவாளம் மீதுவரும்
தொடருந்து காண்பீர் - அதன்
பாதைவழி நடந்துசெல்லும்
பழக்கத்தைத் தவிர்ப்பீர்!"

"போதையின் கொடிய விளைவுகளால்
வாதையில் மடியும் மனிதரிங்கே!"

என வருந்துகிறார் அன்புராசா அடிகள்.

ஊனமுற்றோர் குறித்த மனப்பாங்கு அண்மைக் காலத்தில் மாறி வந்துள்ளது. 'மாற்றுவலுவுள்ளோர்' எனக் கண்ணியமாக அவர்கள் குறிப்பிடப்படுகின்றனர். உடல் ஊனத்தைவிட மோசமானது உள்ளத்து ஊனம் என்கிறார் அடிகள்.

'திரிகடுகம்' என்ற நீதி நூல் சொல்கிறது, ஒரு நூலை எழுதுவது மக்களை அறவழியில் நடத்துவதற்கு என்று. அதற்கமைய இளம் பிள்ளைகள் செல்லவேண்டிய நல்வழியைச் சுட்டுகிறார் அடிகள்:

"சத்தியத்தில் வளர்ந்திடுவோம்
சாதனைகள் படைத்திடுவோம்
உழைப்பினில் உயர்ந்திடுவோம்
உள்ளவற்றைப் பகிர்ந்திடுவோம்!"

எளிய சொற்கள்கொண்டு இசைகூட்டிப் பாடக்கூடிய ஓசையில் அமைந்த இப்பாடல்கள், பிள்ளைகளுக்கு ஒரு வரப்பிரசாதம். பாடி இன்புறவும், ஆடிக் களிக்கவும் ஏற்றவை யாக இவற்றைப் புனைந்த அன்புராசா அடிகளுக்கு என் வாழ்த்து!

**கவிஞர் சோ. பத்மநாதன்**

'ஏரகம்'
கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

*"நீங்கள் மனந்திரும்பிச் சிறு பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்."* (மத்தேயு 18:3)

கவிஞர்கள் தமது புலமையை மறந்து, அணிகளையும் அலங்காரங்களையும் மறந்து, சிறுவரோடு சிறுவராக சிரித்துப் பேசும் முறையில் அமைவதே சிறுவர் பாடல்கள். இப்பாடல்கள் குழந்தைகளின் மனோபாவத்தைத் தழுவியதாக அமையவேண்டும்.

கவிஞனும் குழந்தையும் கற்பனை செய்வதில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்லர். சிறுவர் பாடல்களின் திசையில் இக்கவிஞரின் பார்வை செல்வது நல்ல சகுனமாகும்.

மனித முயற்சிகள் அனைத்திற்கும் எண்ணமே பிறப்பிடம். வாழ்வியற்கூறுகள் அனைத்தின் உயர்வுக்கும் உயர்ந்த எண்ணங்கள் வித்தாக அமைகின்றன. 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்பது வள்ளுவர் கருத்து. மனதில் மாசில்லாதவரின் எண்ணமும் மாசற்றதாகவே இருக்கும். எழுத்து எண்ணத்தை வெளிப் படுத்தும் ஒரு கருவி; அது வரி வடிவமாகவோ, செயல் வடிவமாகவோ, கலை வடிவமாகவோ அமையலாம்.

இவ்வகையில் அருள்பணி செ. அன்புராசாவின் பாடல்கள் தெளிவான சொல்லாட்சியும் சுவையும் கொண்டவை. நீதியைப் போதிப்பவை. சொற்சிக்கனம் கொண்டவை. கருத்துக் கூர்மையானவை. எடுத்த கருத்தையும் அறத்தையும் சிறுவர்கள் மத்தியில் ஆழமாகப் பதிக்கக் கூடியவை. சிறுவர்களின் சிந்தனையைத் தூண்டும் சக்தி இப்பாடல்களுக்கு உண்டு. அத்துடன் குழந்தைகளின் உயர்வைக் கருதிய அறிவுப் பாடல்கள், நீதிப் பாடல்கள் போன்றவை இந்நூலில் முக்கியம் பெறுகின்றன. தீமைகள் அழிந்து நீதியும் நியாயமும் இறுதியில் வெல்லும் என்ற அறிவுரையை ஆணித்தரமாகச் சொல்கின்றன.

மேலும் சிறுவர்கள் விரும்பும் பிராணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தில் நுழைந்து அவர்களின் வழியிலேயே அறத்தையும் அன்பையும் போதிக்கும் பாடல்களையும் எழுதியுள்ளார்.

"அன்புணர்வு தானாக வருவது விலைகொடுத்து வாங்குவது அல்ல." - லாங்க்.ஃ.பெலோ

"எழுத்தாளராகவே பிறக்க வேண்டும், பிறந்த பின்பு எழுத்தாளராக்கப்படக்கூடாது நல்ல எழுத்தாளன்." - வில்லியம் கோல்டிங்

"பக்தி ஒவ்வொரு துணுக்காகச் சேர்க்கப்படும் குடும்பங்களில் ஞான ஒளியுள்ள பிள்ளைகள் பிறக்கின்றனர்." - வினோபா பாவே

"நாம் பிறருக்குக் கொடுக்கக்கூடிய செலவற்ற சிறந்த செல்வம் முன்மாதிரி." - தாமஸ்

மேற்படி கருத்துக்கள் மிகவும் பொருந்தக் கூடியதாக அமைவது அருள்பணி செ. அன்புராசாவுக்கே. இக்கருத்துக்கள் மட்டுமன்றி அவரது பெயருக்கேற்ற வகையில் முன்மாதிரியாகவே வாழ்பவர்.

பூந்தோட்டத்தின் வாசலில் நின்று கொண்டு பூக்களை இரசிக்க உள்ளே விடாது. அவை பற்றிக் கூற முயற்சிப்பதால் வாசகனின் வெறுப்பைப் பெற நேரும். வெறுப்பை ஏற்படுத்தியமைக்கு மன்னித்து பூந்தோட்டத்தின் உள் நுழைந்து பூக்களை இரசியுங்கள்.

அருட்தந்தையின் அருமையான பாடல்களுக்கு என் வாழ்த்துக்கள்.

**திருமதி. மைதிலி தேவராஜா**

உதவிக் கல்விப்பணிப்பாளர்

(ஆரம்பக்கல்வி)

வலயக்கல்வி அலுவலகம்,

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

எட்டு நூல்களை இதுவரையில் வெளியீடு செய்துள்ளேன். 'சிறகடிக்கும் சிட்டுக்கள்' என்ற ஒன்பதாவது நூலாகிய இந்நூல் எனது முதலாவது கவிதை நூலும், முதலாவது சிறுவர் இலக்கியப் படைப்புமாகும்.

என் கவிதைகளை அங்காங்கே சில சஞ்சிகைகளில் எழுதி வெளியிட்டுக் கொண்டும், கவிதைத் தொகுதி ஒன்றினை வெளியிடுவதற்கான எண்ணமும், அதற்கான ஆக்கங்களும் ஆயத்தமாக இருப்பினும் அதற்கு முன்பதாக இக்குழந்தை எதிர்பார்த்திராத குழந்தையாக கருத்தரித்து விட்டது.

இக்குழந்தை கருத்தரித்த காலப் பகுதியிலேயே கவித்தென்றல் அ.அழகராஜா அவர்களிடமும், நாடு கடந்தும் அறியப்பட்ட அறிஞர், கவிஞர் 'சோ.ப.' எனச் சுருக்கமாக அழைக்கப்படும் சோ.பத்மநாதன் 'சேர்' அவர்களிடமும் இக்குழந்தை பற்றிக் கூறியபோது மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார்கள்.

சிறுவர் இலக்கியத்தில் இக்குழந்தை எனக்கு முதல் பிரசவம் என்பதால் கண்ணும் கருத்துமாக வரிவரியாய் வாசித்து ஆக்கபூர்வமான கருத்துக்களையும் திருத்தங்களையும் மகிழ்வோடு அளித்தார்கள். கவிதையில் நிபுணர்களான இவர்களின் கைபட்டதால் இக்குழந்தையின் சுகப்பிரசவம் எனக்கு பெரும் நிறைவையும் மனமகிழ் வையும் தருகிறது. இவர்களே முறையே முன்னுரை, வாழ்த்துரை ஆகியவற்றைத் தந்து சிறப்பித்துள்ளார்கள். இருவரும் என் நன்றிக்கு உரியவர்கள்.

சிறுவர் இலக்கியங்கள் சிறுவர்களின் உலகை மகிழ்விப்பதாகவும், சிறுவர்களின் நேர்மறைச் சிந்தனையை ஏற்படுத்துவதாகவும், அவர்களின் ஆளுமைத் திறன்களை வளர்ப்பதாகவும் அமைந்திருக்க வேண்டும். இவற்றை மனதில் கொண்டு இந்நூலில் உள்ள பாடல்களைப் படைத்துள்ளேன்.

சிறுவர்களின் ஆளுமை விருத்தி, கல்வி, ஒழுக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற துறைகளில் பெற்றோர் - ஆசிரியர்கள் இப் பாடல்களைப் பயன்படுத்தக் கூடியதாக ஆக்கி அளித் திருக்கிறேன்.

மேலும், மிக வேகமாகப் பல்வேறு மாற்றங் களுக்கு, குறிப்பாக, தொழில்நுட்ப - தொடர்புசாதன மாறுதல்களுக்கு உள்ளாகிவரும் சூழலில், இன்றைய சிறுவர்களுடன், அவர்தம் பெற்றோர் - ஆசிரியர் மிகவும் விழிப்புணர்வோடு வழிநடந்து செல்லவேண்டியும், அவர்களை விழிப்புணர்வோடு வழிப்படுத்த வேண்டியும் இருக்கிறது. ஆகவே, சிறுவர்களுக்கான விழிப்புணர்வை அவர்கள் புரிகின்ற மொழியில் இப்பாடல்களில் புகுத்த முனைந்தேன்.

அவ்வகையில், இன்றைய சூழலில் சிறுவர்கள் சம்மந்தமான புதிய விடயங்களை இந்நூலில் உள்ள சிறுவர் பாடல்கள் பேச முனைகிறது என எண்ணுகிறேன். இந்நோக்கில், இந்நூல் இக்காலகட்டத்தில் பயனுள்ளதாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

இந்நூலுக்குப் பொருத்தமான அணிந்துரையைத் தந்துதவிய யாழ். கல்வி வலய ஆரம்பக் கல்விப் பிரிவுப் பணிப்பாளர் திருமதி தேவராஜா மைதிலி அவர்களுக்கும் என் நன்றிகள். இப்பாடல்களுக்குப் பொருத்தமான சித்திரங்களை வரைந்துதவிய டொ.கிறிஸ்ரியன் ஒஸ்ரட், கீ.செரோன் றோகித், செ.டினுசன், செ.ஆன் தர்சனா, அ.அகிசயன், யே.றியாணி, எஸ்.கெவின், எஸ்.அன்ரனி அபியூட், எஸ்.ஜெனிஸ்ராஜ், ந.டிலிக்சிகா, க.ஐங்கரன் ஆகிய கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவச் செல்வங்களுக்கும், இவர்களை வழிநடத்திய சித்திரச் சீராளன் திரு. டொமினிக் ஜீவா அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

மேலும் 'சிறகடிக்கும் சிட்டுக்கள்' என்ற இச்சிறுவர் பாடல்கள் அடங்கிய நூலில் எட்டுப் பாடல்களுக்கு இராகம் அமைத்து, பாடி, இறுவட்டாக ஆக்கியளிப்பது சிறுவர்களுக்கும், சிறுவர்களோடு வழிநடக்கும் பெற்றோர் களுக்கும், ஆசிரியர்களுக்கும் பேருதவியாக இருக்கும் என்பதால் அதனையும் பெரும் முயற்சி எடுத்து ஆக்கிக் கொடுத்திருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில், இப்பாடல்களுக்கு மெட்டமைத்து உதவி புரிந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறை, இசைத்துறை, விரிவுரையாளர் திருமதி சுகன்யா அரவிந்தன், யாழ். திருக்குடும்ப கன்னியர் மட தேசிய பாடசாலை இசை ஆசிரியர் திரு. இ.ஜெயகாந்தன், இசை ஒருங்கிணைப்பாளர் திரு.பொஸ்கோ, வயலின் இசை மீட்டிய விரிவுரையாளர் செல்வி பிறிசில்லா ஜோர்ஜ், மற்றும் பாடல்களைப் பாடியளித்த சிறுவர்களான நீ.தேவ அமிர்தா (அம்மு), ரி.ஜோகான்னா, எஸ்.டிலக்ஷினி (ஸ்ரெவ்னி) மற்றும் திரு. இ.ஜெயகாந்தான், திருமதி சுகன்யா அரவிந்தன், தி.மேரி, சா.வினித்தா ஆகியோருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

நான் விரும்புவதுபோல் நூலை கணினியில் வடிவமைக்கவும் அச்சிடவும் உதவிய கலாபூஷணம் கு.இராயப்பு, எஸ்.ஜே. பிறின்ரஸ் ஆகியோர்க்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகள் உரித்தாகுக.

இப்பாடல்கள் சிறுவர்களின் உலகை மகிழ்ச்சிப் படுத்த சிறு பங்களிப்பாக அமையும் என நம்புகிறேன்.

**அருள்பணி. செ.அன்புராசா**


இயக்குநர், 'அமதிக்கரங்கள்'

மாங்குளம் (A9 230வது மைல்கல்)

மின்னஞ்சல்: anpuomi1970@gmail.com

முகநூல்: Sebamalai Anpurasa

அலைபேசி: 0778 648 548





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகடிக்கும் சிட்டுக்கள்


உள்ளே



| | | |
|---|---|---|
| 01. | இறையே நிறைவே | - 03 |
| 02. | எங்கள் தமிழ் | - 05 |
| 03. | மதித்துத் துதிப்போம் | - 07 |
| 04. | நாமாவோம் | - 08 |
| 05. | உறுதி கொள்வோம் | - 09 |
| 06. | கூடி ஆடிப் பாடுவோம் | - 10 |
| 07. | எண்ணும் எழுத்தும் | - 11 |
| 08. | அகர முதல | - 13 |
| 09. | வாசிப்பை நேசிப்பதால்... | - 14 |
| 10. | வினாவும் விடையும் | - 15 |
| 11. | அதிகாலை ஆனந்தம் | - 16 |
| 12. | காவற் கடமை ஆற்றுவேன் | - 17 |
| 13. | தவிர்ப்பீர் | - 18 |
| 14. | இயற்கையைப் பாதுகாப்போம் | - 21 |
| 15. | அவதானம் வேண்டும் | - 23 |
| 16. | பொழுதுகளைப் பொன்செய்வோம் | - 25 |
| 17. | நிலை மாறுமா? | - 27 |
| 18. | இனியது சேரட்டும் | - 29 |
| 19. | நன்றே | - 30 |
| 20. | நற்குணத்தால் நலம் பெறுவோம் | - 31 |
| 21. | பார்க்கப் போவோம் | - 33 |
| 22. | வெவ்வேறு வேளைகளில்... | - 35 |
| 23. | கலங்கரையாய் ஒளிர்ந்திடுவோம் | - 36 |
| 24. | கல்வியால் அலங்கரிப்போம் | - 37 |
| 25. | ஆற்றல்கள் வளரட்டும் | - 38 |
| 26. | உள ஊனம் | - 39 |
| 27. | நலமே புரிவோம் | - 41 |
| 28. | உங்களுக்கு நன்றி | - 42 |
| 29. | ஓடியாடி விளையாடுவோம் | - 43 |
| 30. | தமிழதனைத் தரணியெங்கும்... | - 44 |
| 31. | தொலைக்காட்சி | - 47 |
| 32. | அழகு பாருங்கள் | - 48 |
| 33. | கவனமுடன் கையாளுவோம் | - 50 |
| 34. | வீட்டுத் தோட்டம் | - 51 |
| 35. | வேண்டும் | - 52 |







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01. இறையே நிறைவே


இறையே நீ மறையாய்
உறைவாய் நீ நிறைவாய்
இறையே நீ விரைவாய்
வருவாய் நீ திருவாய்

இறையே நீ எழுவாய்
ஒளியாய் நீ வருவாய்
இறையே நீ மகிழ்வாய்
தருவாய் நீ வரமாய்

இறையே நீ இசையாய்
இணைவாய் நீ இனிதாய்
இறையே நீ தமிழாய்
அருள்வாய் நீ தயவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

# 02. எங்கள் தமிழ்

இனிய தமிழ் எங்கள் இன்பத் தமிழ்
புனித தமிழ் எங்கள் புதுமைத் தமிழ்
இயலில் தமிழ் எங்கள் இசையில் தமிழ்
நாடகத் தமிழ் எங்கள் நலம்சேர் தமிழ்

மதுரத் தமிழ் எங்கள் மங்காத் தமிழ்
அமுதத் தமிழ் எங்கள் அருமைத் தமிழ்
சங்கத் தமிழ் எங்கள் சந்தத் தமிழ் - நாம்
சுவைக்கும் தமிழ் எங்கள் சொந்தத் தமிழ்

பழமைத் தமிழ் எங்கள் புதுமைத் தமிழ்
பக்தித் தமிழ் எங்கள் பாசத் தமிழ்
அன்னைத் தமிழ் எங்கள் அழகுத்தமிழ்
வாழ்வு தமிழ் எங்கள் வளமும் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
10 JUN 2020
யாழ்ப்பாணம்

## 03. மதித்துத் துதித்திடுவோம்

அம்மா அப்பா இருவரையும்
அனுதினம் வணங்கி வாழ்த்துங்கள்.

ஆசிரியர் குரு இருவரையும்
அகமதில் என்றும் நினையுங்கள்.

பாட்டன் பாட்டி இருவரையும்
பண்பாய் மனத்தில் இருத்துங்கள்.

அண்ணா அக்கா இருவரையும்
அன்புடன் மதித்து நடவுங்கள்.


தம்பி தங்கை இருவரையும்
தயவாய் ஏற்றுக் கொள்ளுங்கள்.

செல்வர் ஏழை இருவரையும்
சமனாய் மதித்துப் பழகுங்கள்.

அயலார் அந்நியர் இருவரையும்
அன்பாய் வாழ்த்தி மதியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 04. நாமாவோம்

கைகள் இழந்து தவிப்போர்க்கு
காக்கும் கரங்கள் நாமாவோம்
கால்கள் இன்றித் தவிப்போர்க்கு
ஊன்று கோலும் நாமாவோம்.

பார்க்கும் கண்கள் இழந்தோர்க்கு
பாரில் விழிகள் நாமாவோம்
கேட்கும் செவிகள் இழந்தோர்க்கு
கேள்வி ஞானம் நாமாவோம்.

பேசும் திறன்கள் இழந்தோர்க்கு
பேச்சும் மொழியும் நாமாவோம்
உறவை இழந்து தவிப்போர்க்கு
கூடி மகிழும் உறவாவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05. உறுதி கொள்வோம்

தம்பி தங்கையர் வாருங்கள்
தயவாய் இதனைக் கேளுங்கள்!

உண்மை உரைத்தல் உயர்வென்று
திடமாய் மனதில் இருத்துங்கள்.

நன்மை செய்தல் நலமென்று
நன்றாய் மனதில் நிறுத்துங்கள்.

உதவி புரிதல் சிறப்பென்று
உணர்ந்து கொண்டு வாழுங்கள்.

கடமை செய்தல் கடனென்று
கருத்தாய் உளத்தில் வையுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 06. கூடி ஆடிப் பாடுவோம்

ஆடி ஆடிப் பாடுவோம்
அன்பு செய்து வாழுவோம்.

பாடிப் பாடி ஆடுவோம்
பரமன் புகழே பாடுவோம்.

ஓடி விளை யாடுவோம்
ஒன்று சேர்ந்து உயருவோம்.

கூடிநாம் கொண் டாடுவோம்
கோடி நன்மை ஆற்றுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07. எண்ணும் எழுத்தும்

ஒன்றும் ஒன்றும் இரண்டு
இரண்டு திணைகள் உண்டு

இரண்டும் ஒன்றும் மூன்று
மூன்று தமிழே உண்டு


மூன்றும் ஒன்றும் நான்கு
நான்கு பொருளும் உண்டு

நான்கும் ஒன்றும் ஐந்து
ஐந்து இலக்கணம் உண்டு

ஐந்தும் ஒன்றும் ஆறு
ஆறு சுவைகள் உண்டு

ஆறும் ஒன்றும் ஏழு
ஏழு வர்ணம் உண்டு

ஏழும் ஒன்றும் எட்டு
எட்டு வேற்றுமை உண்டு




எட்டும் ஒன்றும் ஒன்பது
ஒன்பது ரசங்கள் உண்டு

ஒன்பதும் ஒன்றும் பத்து
பத்தாய் குறள்கள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

276728

## 08. அகர முதல

அ என்று சொல்லிடுவோம்
அறத்தை நிலை நாட்டிடுவோம்
ஆ என்று சொல்லிடுவோம்
ஆணவத்தை அகற்றிடுவோம்
இ என்று சொல்லிடுவோம்
இன்சொல்லே பேசிடுவோம்
ஈ என்று சொல்லிடுவோம்
ஈசன் பதம் தொழுதிடுவோம்
உ என்று சொல்லிடுவோம்
உண்மையே உரைத்திடுவோம்
ஊ என்று சொல்லிடுவோம்
ஊக்க முடன் முயன்றிடுவோம்
எ என்று சொல்லிடுவோம்
எழுச்சி பெற முயன்றிடுவோம்
ஏ என்று சொல்லிடுவோம்
ஏற்றமதே பெற்றிடுவோம்
ஐ என்று சொல்லிடுவோம்
ஐயம்தனை அகற்றிடுவோம்
ஒ என்று சொல்லிடுவோம்
ஒரு குலமாய் வாழ்ந்திடுவோம்
ஓ என்று சொல்லிடுவோம்
ஓம் என்றே ஓதிடுவோம்
ஔ என்று சொல்லிடுவோம்
ஔவியம் விலக்கிடுவோம்
ஃ என்று சொல்லிடுவோம்
அஃது நன்றே கண்டிடுவோம்.

13185CC
KOHA JPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09. வாசிப்பை நேசிப்பதால்...


வாசிப்பை நேசித்து வளம்பெறுவோம்
வாசித்து சிந்தித்துச் செயற்படுவோம்.

வாசிப்பைப் பகிர்ந்து பயன்பெறுவோம்
வாசித்து யோசித்து சிறப்படைவோம்.

வாசிப்பின் அவசியம் உணர்ந்திடுவோம்
வாசிப்பில் உயர்வை அடைந்திடுவோம்.

வாசிப்பால் அறிவியல் வளர்த்திடுவோம்
வாசிப்பால் அறவழி வாழ்ந்திடுவோம்.

வாசிப்பால் மனிதமும் நிறைகிறது
வாசிப்பு மனிதனை நிறைக்கிறது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. வினாவும் விடையும்

"எலியாரே குட்டி எலியாரே
எப்படி நீர் வாழுகிறீர்?"
'பூனையார் கண்ணிற்படாது
பொந்துக்குள் வாழுகிறோம்!'

"ஆடாரே குட்டி ஆடாரே
எப்படி நீர் வாழுகிறீர்?"
'ஓநாய்களின் மத்தியிலும்
ஒருவாறு வாழுகிறோம்!'

"மானாரே புள்ளி மானாரே
எப்படி நீர் வாழுகிறீர்?"
'சிங்கம் புலிகளிடை
சிக்காமல் வாழுகிறோம்!'




"கோழியாரே குஞ்சாரே
எப்படி நீர் வாழுகிறீர்?"
'பருந்துகளின் கண்களுக்குள்
பட்டிடாது வாழுகிறோம்!'

"கன்றாரே பசுக் கன்றாரே
எப்படி நீர் வாழுகிறீர்?"
'தாய்ப்பசுவின் அரவணைப்பில்
ஆனந்தமாய் வாழுகிறேன்!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 11. அதிகாலை ஆனந்தம்!

கொக்கரக்கோ எனக்கூவி
விழித்திடுங்கள் எனக்கூறி
அதிகாலைப் பொழுதினிலே
அனைவரையும் அழைத்திடுவேன்.

காலையிலே எழுப்பி எந்தன்
கடமைதனைச் செய்திடுவேன்-நீர்
விரைந்தெழுந்து செயற்படவே
என்குரலால் உணர்த்திடுவேன்.

துயிலெழுந்து துடிப்புடனே
தொண்டுகள் நீர் ஆற்றிடவே
தொய்வில்லா கொக்கரிப்பால்
துணையாய் நான் இருந்திடுவேன்.

அதிகாலைக் கருமமதில்
ஆர்வமது கொண்டிடுவேன்
அடுத்தவர்க்குப் பணிபுரிந்து
ஆனந்தம் கண்டிடுவேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. காவற் கடமை ஆற்றுவேன்

இரவுபகல் விழித்திருந்து
இன்பமுடன் காத்திருந்து
கவனமுடன் காவல் செய்து
கடமையினை ஆற்றிடுவேன்-நான்
கடமையினை ஆற்றிடுவேன்.

வீட்டுக்காரர் இருக்கும்போதும்
வெளியினிலே போகும்போதும்
விசுவாசமாய் இருந்து நாளும்
விபரீதங்கள் தடுத்திடுவேன்-நான்
விபரீதங்கள் தடுத்திடுவேன்.




நட்புடனே உறவைப்பேணி
நன்றியுடன் வாழ்ந்துஎன்றும்
நாணயமாய் நடந்து நானும்
நன்மைகளே புரிந்திடுவேன்-நான்
நன்மைகளே புரிந்திடுவேன்.

'வள்வள்' என்று குரைத்துநின்று
வாய்கிழியக் கத்திநின்று
வருமிடர்கள் நீக்கி என்றும்
வளமுடனே வாழச்செய்வேன்-நான்
வளமுடனே வாழச்செய்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௩. தவிர்ப்பீர்

பாரத்துடன் ஓடிவரும்
பாரஊர்தி காண்பீர் - வழி
ஓரத்திலே நின்றுவிளை
யாடுவது தவிர்ப்பீர்!

தண்டவாளம் மீதுவரும்
தொடருந்து காண்பீர் - அதன்
பாதைவழி நடந்துசெல்லும்
பழக்கத்தைத் தவிர்ப்பீர்!

வீதி வழி நித்தம்வரும்
பேருந்து காண்பீர் - அது
போகும்வரை பொறுத்துநின்று
பாதையை நீர்கடப்பீர்!


வேகமாக ஓடிவரும்
மகிழுந்து காண்பீர் - நடு
வீதியில் கூடிநின்று
கதைப்பதையும் தவிர்ப்பீர்!

பறந்தோடி வருகின்ற
உந்துருளி காண்பீர் - அதன்
முன்ஓடி சாகசங்கள்
செய்வதைநீர் தவிர்ப்பீர்

பொது நூலகம் 10 JUN 2020 மாநகர சபை யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. இயற்கையைப் பாதுகாப்போம்

மரங்களை வளர்த்துநாமும்
மழைதனைப் பெற்றிடுவோம்
தானியங்கள் விதைத்துநாமும்
தரணியையே உயர்த்திடுவோம்.

குப்பைகளை எரித்திடாமல்
பசளைகளாய் மாற்றிடுவோம்
பயிர்களைச் செய்துநாளும்
பசித்துயர் போக்கிடுவோம்.

செயற்கைவழி முறைகளைநாம்
செய்யாது விட்டொழிப்போம்.
இயற்கையோ டிணைந்துநின்று
இன்பமுடன் வாழ்ந்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. அவதானம் வேண்டும்

வீதிவழி செல்லுகையில்
விவேகத்துடன் நடந்திடுவோம்
வீணானசெயல் விட்டு
வெகுதூரம் விலகிடுவோம்.

அறியாதார் அழைப்புக்களை
அவதானமாய் அணுகிடுவோம்
அன்னை தந்தை அறியாது
செய்யும் செயல் தவிர்த்திடுவோம்.

அன்றாட நிகழ்வுகளை
அன்புடனே பகிர்ந்திடுவோம்
ஆசிரியர் பெரியவர்கள்
அறிவுரைகள் கேட்டிடுவோம்.

உயர்வுதரும் நட்பதனை
உன்னதமாய்க் கொண்டிடுவோம்
நன்மையையும் தீமையையும்
பகுத்தறிந்து வழிநடப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. பொழுதுகளைப் பொன்செய்வோம்

கல்வியினைக் கண்ணாகப் போற்றிடுவோம்
கலைகள்தமைக் கருத்துடனே பயின்றிடுவோம்
காலங்களை வீணாகக் கரைத்திடாமல்
கருமங்களை விருப்புடனே ஆற்றிடுவோம்.

கடமைகளை கவனமாய்ச் செய்திடுவோம்
கண்ணியம் தவறாமல் நடந்திடுவோம்
பொழுதுகளை வீணாகக் கழித்திடாமல்
புதுமைகளைப் புரிந்திடவே புறப்படுவோம்.


தமிழர்தம் பண்பாட்டைப் பேணிடுவோம்
தாய்மொழியாம் தமிழ்தனையே துதித்திடுவோம்
நேரங்களை வீணாகப் போக்கிடாமல்
நேர்த்தியாய்ச் செயல்களைநாம் தொடர்ந்திடுவோம்.

பெற்றோரை பெரியோரை மதித்திடுவோம்
பெருமைமிகு அவர்சால்பு உரைத்திடுவோம்
ஆண்டுகளை வீணாக கழித்திடாமல்
அர்த்தமுடன் வாழ்ந்திடவே முடிவெடுப்போம்.

இளையோர் நாமெழுச்சி கொண்டிடுவோம்
இனியொரு விதிசெய்யப் புறப்படுவோம்
இளமையினை விரயமே செய்திடாமல்
இகத்தினிலே வாழ்ந்திடநாம் தலைப்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. நிலை மாறுமா?

வீதியில் விபத்துக்கள் அதிகமிங்கே - அதி
வேகமே அதற்குக் காரணமே
கடந்தும் நடந்தும் போகையிலே
கவனத் துடனே செல்லணுமே!


மதுவைக் குடிப்போர் அதிகமிங்கே - அது
மனிதர் தமக்கே நஞ்சாமே
மதுவை அதிகம் குடிப்பவர்கள்
மடிந்தே அழியும் நிலையுமிங்கே!

போதைப் பொருள்கள் அதிகமிங்கே - இது
போருக்குப் பின்னால் புகுந்ததிங்கே
போதையின் கொடிய விளைவுகளால்
வாதையில் மடியும் மனிதரிங்கே!

குற்றச் செயல்கள் அதிகமிங்கே - பல
குளறு படிகளும் தொடருதிங்கே
குறைகளைக் களையாது விட்டதினால்
குழப்பமே மிஞ்சும் நிலையுமிங்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. இனியது சேரட்டும்

அகந்தை வேண்டாம்
அழுக்காறும் வேண்டாம்
அன்பு ஒன்றே
அனைத்தையும் வெல்லும்.

பகைமை வேண்டாம்
பகட்டும் வேண்டாம்
பண்பு ஒன்றே
பாரில் நிலைக்கும்.

பிரிவுகள் வேண்டாம்
பிளவுகள் வேண்டாம்
பரிவு ஒன்றே
பாரை ஆளும்.

சண்டைகள் வேண்டாம்
சச்சரவும் வேண்டாம்
சமரசம் ஒன்றே
சாந்தி தருமாம்.

கள்ளம் வேண்டாம்
கபடமும் வேண்டாம்
கனிவு ஒன்றே
கடவுளைச் சேரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 19. நன்றே

ஏழைக்கு இரங்குதல் நன்றே
இல்லார்க்கு ஈதலும் நன்றே.

தேவைகள் தீர்த்திடல் நன்றே
தீதினை விலக்கிடல் நன்றே.

ஆபத்தில் உதவிடல் நன்றே
அறிஞரைப் போற்றுதல் நன்றே.

யாவரையும் மதித்திடல் நன்றே
நன்மைகள் புரிந்திடல் நன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. நற்குணத்தால் நலம் பெறுவோம்

அன்பு செய்து
அனைவரையும் அணைத்திடலாம்.

அமைதி காத்து
அகிலத்தையே ஆண்டிடலாம்.

பரிவு காட்டி
பரமன்குணம் பகிர்ந்திடலாம்.

கனிவு கொண்டு
கடவுள்மனம் பெற்றிடலாம்.

இனிது வாழ்ந்து
இன்பமதைக் கண்டிடலாம்.


நட்புக் கொண்டு
நானிலத்தை வென்றிடலாம்.

புரிந் துணர்வால்
புதுமைகளைப் படைத்திடலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. பார்க்கப் போவோம்

வயல்வெளிக்குப் போகலாம்
நெல்மணிகள் பார்க்கலாம்
விவசாயம் செய்பவரின்
மெய்வருத்தம் காணலாம்.

கடற்கரைக்குப் போகலாம்
கடலழகு பார்க்கலாம்
மீன்பிடிக்கும் தொழிலாளி
மேன்மையினை உணரலாம்.

கிராமத்துக்குப் போகலாம்
இயற்கையினைப் பார்க்கலாம்
நாட்டுப்புற மக்கள்வாழ்வின்
நன்மைகளை அறியலாம்

நகரத்துக்குப் போகலாம்
நாலுபுதினம் பார்க்கலாம்
நாகரிக உலகத்தின்
நவீனத்தைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. வெவ்வேறு வேளைகளில்...

காலை மாலை வேளைகளில்
கடவுளைக் கை தொழுதிடுவோம்.

பொழுது சாயும் வேளைகளில்
பொறுப்பாய் வீட்டில் இருந்திடுவோம்.

முற்பகல் நேரம் தவறாது
முழுமையாய் கல்வி பயின்றிடுவோம்.

மாலை நேரம் ஆனதுமே
மைதானம் நோக்கிப் பறந்திடுவோம்.

இரவுப் பொழுதின் அமைதியிலே
இருந்து படிப்பைத் தொடர்ந்திடுவோம்.

விடியற் காலை வேளைதனில்
விரைந்து எழுந்து செயற்படுவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. கலங்கரையாய் ஒளிர்ந்திடுவோம்

பாடசாலை சென்று நாளும்
பாடங்களைக் கற்றிடுவோம்-நற்
பழக்கங்களை வளர்த்து நாமும்
பண்புகளில் உயர்ந்திடுவோம்.

ஆசிரியர் தினம் உரைக்கும்
அறிவுரைக்கு செவிமடுப்போம்-நாம்
ஆய்ந்தறிந்த அனுபவத்தை
ஆளுமையில் அலங்கரிப்போம்.

கல்விகலை விளை யாடல்
கருத்துடனே பயின்றிடுவோம்-தினம்
பெற்றோர் பெரியோர் முன்னிலையில்
பெயர்துலங்க ஒளிர்ந்திடுவோம்.



உயர்வுதாழ்வு பேதம் நீங்க
ஒன்றுபட்டு உழைத்திடுவோம்-நாம்
ஒருதாயின் மக்கள் என்று
ஒருமித்து முழங்கிடுவோம்.

பட்டம் பதவி கௌரவங்கள்
படுத்தும் பாடொழித்திடுவோம்-நிதம்
பண்புடன் மனிதம் வாழ
பல்கலையும் பயின்றிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 24. கல்வியால் அலங்கரிப்போம்

பொதுசன நூலகம்
10 JUN 2020
யாழ்ப்பாணம்

பாடிப் பாடி விளையாடி
பாடங்கள் பயின்றிடுங்கள்
பகுத்தறிவில் வளர்ந்து நாளும்
பார்புகழ வளர்ந்திடுவோம்.

காலை மாலை வேளையில்நாம்
கல்வியினைத் தொடர்ந்திடுவோம்
காலத்தின் குறிகளை நாம்
கருத்ததனில் கொண்டிடுவோம்.

ஆசிரியர் அறிவுரையை
ஆர்வத்துடன் கேட்டிடுவோம்
ஆற்றல்களைப் பயன்படுத்தி
அவனியைநாம் அலங்கரிப்போம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 25. ஆற்றல்கள் வளரட்டும்

பாடிப் பாடிப் பயின்றிடுவோம்
பாடும் ஆற்றல் பெற்றிடுவோம்
ஆடி ஆடிப் பழகிடுவோம்
ஆடும் கலையைக் கற்றிடுவோம்.

பேசிப் பேசிப் பயின்றிடுவோம்
பேச்சுக் கலையில் வளர்ந்திடுவோம்
நடித்து நடித்துப் பழகிடுவோம்
நாடகக் கலையில் சிறந்திடுவோம்.

எழுதி எழுதிப் பயின்றிடுவோம்
எழுதும் ஆற்றல் பெற்றிடுவோம்
வரைந்து வரைந்து பழகிடுவோம்
வரைதல் கலையை வளர்த்தெடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. உள ஊனம்!



உடல்சார் ஊனமது
உருப்படுத்த முடியுமம்மா
உள்ளத்து ஊனமதை
உருப்படுத்தல் இயலுவதோ!

உடல்சார் ஊனமுடன்
ஒருவாறு வாழ்ந்திடலாம்
உள்ளத்து ஊனமதோ
உருக்குலைத்து வாட்டுமம்மா.


உடல்சார் ஊனமுடன்
உழைத்துயர்ந்து வாழ்ந்திடலாம்
உள்ளத்து ஊனமதோ
உறுதியினைக் குலைக்குமம்மா.

உடல்சார் ஊனமுடன்
உலவுபவர் பலருண்டு
உள்ளத்து ஊனமுடன்
உழலுபவர் அதிகமுண்டு.

உடல்சார் ஊனமதை
மேவிநிதம் வாழ்ந்திடலாம்
உள்ளத்து ஊனமதோ
உள்ளதெல்லாம் அழித்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27. நலமே புரிவோம்

பள்ளிதனில் கூடிடுவோம்
பாடங்களைப் பயின்றிடுவோம்
பண்புகளில் உயர்ந்திடுவோம்
பாருலகில் ஒளிர்ந்திடுவோம்.

கலைகள்யாவும் கற்றிடுவோம்
கருத்தாய்க் கடமை புரிந்திடுவோம்
கண்ணியமாய் வாழ்ந்திடுவோம்
கடவுள் வழியில் நடந்திடுவோம்.

சத்தியத்தில் வளர்ந்திடுவோம்
சாதனைகள் படைத்திடுவோம்
உழைப்பினிலே உயர்ந்திடுவோம்
உள்ளவற்றைப் பகிர்ந்திடுவோம்.

ஒற்றுமையாய் வாழ்ந்திருப்போம்
ஒருவருக்கும் தீங்கிழைக்கோம்
நன்மையையே செய்திருப்போம்
நானிலத்தில் மகிழ்ந்திருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28. உங்களுக்கு நன்றி

பசுவாரே பசுவாரே - உம்
பாலுக்கு நன்றி
பசுவாரே பசுவாரே - உம்
கன்றுக்கும் நன்றி.

கோழியாரே கோழியாரே - உம்
முட்டைக்கு நன்றி
கோழியாரே கோழியாரே - உம்
குஞ்சுக்கும் நன்றி.

மயிலாரே மயிலாரே - உம்
தோகைக்கு நன்றி
மயிலாரே மயிலாரே - உம்
ஆடலுக்கும் நன்றி.

குயிலாரே குயிலாரே - உம்
குரலுக்கு நன்றி
குயிலாரே குயிலாரே - உம்
பாட்டுக்கும் நன்றி.

நாயாரே நாயாரே - உம்
காவலுக்கு நன்றி
நாயாரே நாயாரே - உம்
நட்புக்கும் நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. ஓடியாடி விளையாடுவோம்

ஓடியாடி விளையாடுதல்
உடலுக்குச் சுகம்தரும்.

ஆடிப்பாடி நடனமாடுதல்
ஆழ்மன அமைதிதரும்.

கூடிஒன்றாய் சேர்ந்திருத்தல்
குதூகலத்தைக் கொண்டுவரும்.

நாடிநிதம் பணிந்திருந்தால்
கோடிநன்மை குவிந்துவரும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30. தமிழதனைத் தரணியெங்கும்

வள்ளுவனும் பாரதியும்
        வளர்த்தெடுத்த தமிழதனை
வண்ணமுடன் கற்றுயர்ந்து
        வாழ்வாங்கு வாழ்ந்திடுவோம்.

இளங்கோவும் கம்பனுமாய்
        இயம்பிநின்ற தமிழதனை
இன்பமுடன் சுவைத்தறிந்து
        இகத்தினிலே வாழவைப்போம்.


ஞானப்பிரகாச முனி
        ஆய்ந்தறிந்த தமிழதனை
ஆர்வமுடன் படித்துநாளும்
        நன்மக்கள் ஆகிநிற்போம்.

நல்லைநகர் நாவலனார்
        நலஞ்செய்த நற்றமிழை
நானிலத்தில் பரப்பியென்றும்
        நலன்களைநாம் பெற்றுயர்வோம்.

276728



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எங்கள்தனி நாயகனார்
ஏற்றிவைத்த தமிழதனை
எத்திக்கும் எடுத்துரைத்து
எழில்கொள்ளச் செய்திடுவோம்.

விபுலானந்தரும் வீரமாமுனிவரும்
விதந்துரைத்த தமிழதனை
விருப்புடனே கற்றுயர்ந்து
விழுமியங்கள் வளர்த்திடுவோம்.

புரவலரும் பாவலரும்
புகழ்ந்துரைத்த தமிழதனை
புதுமலரால் அலங்கரித்து
புத்துலகம் படைத்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31. தொலைக்காட்சி

பயன்தரும் நிகழ்ச்சிகளை
பார்த்து மகிழ்ந்துநிதம்
பண்பான மனிதர்களாய்
பாரில் உயர்ந்திடுவோம்.

அடிமையாகும் மனநிலையை
அறவே விலக்கிவிட்டு
ஆக்கங்கள் புனைந்திடவே
ஆயத்த மாகிடுவோம்.

நீண்டநேரம் பார்ப்பதனால்
தீண்டவரும் தீவினையை
நீக்காது விட்டுமன
நிம்மதி இழக்கலாமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 32. அழகு பாருங்கள்!

பறவைகளைப் பாருங்கள் - அவை
பறக்கும் அழகைப் பாருங்கள்
காக்கைகளைப் பாருங்கள் - அவை
கரையும் அழகைப் பாருங்கள்
குருவிகளைப் பாருங்கள் - அவை
கீச்சுக் குரலைக் கேளுங்கள்
கிளிகளைப் பாருங்கள் - அவை
பேசும் அழகைப் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடும்மயிலைப் பாருங்கள் - அவை
அகவும் அழகைப் பாருங்கள்
கூவும்குயிலைப் பாருங்கள் - அவை
கூவும்அழகைப் கேளுங்கள்
குரங்குகளைப் பாருங்கள் - அவை
குதிக்கும் அழகைப் பாருங்கள்
ஆடும்மாடும் பாருங்கள் - அவை
மேயும் அழகைப் பாருங்கள்.

நாய்கள்தம்மைப் பாருங்கள் - அவை
குரைக்கும் அழகைப் பாருங்கள்
பூனைகளைப் பாருங்கள் - அவை
சீறும் அழகைக் கேளுங்கள்
யானைகளைப் பாருங்கள் - அவை
பிளிறும் அழகைப் பாருங்கள்
சிங்கங்களைப் பாருங்கள் - அவை
சிலிர்க்கும் அழகைப் பாருங்கள்.

புலிகள்தம்மைப் பாருங்கள் - அவை
உறுமும் அழகைப் பாருங்கள்
நரிகள்தம்மைப் பாருங்கள் - அவை
ஊளையிடு வதைக் கேளுங்கள்.
மான்கள் தம்மைப் பாருங்கள் - அவை
மருளும் அழகைப் பாருங்கள்
முயல்கள் தம்மைப் பாருங்கள் - அவை
பாயும் அழகைப் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33. கவனமுடன் கையாளுவோம்

கைத்தொலை பேசிதனை
கவனமுடன் கையாள்வோம்
காரணம் இல்லையெனில்
நாமதனைத் தவிர்த்திடுவோம்.


காலத்தை வீணாக்கி
நேரத்தைக் கழியோம்நாம்
பயன்பாடு எதுவுமின்றி
பணந்தன்னைக் கரையோம்நாம்.

தொலைபேசி தருகின்ற
தொல்லைகளைத் தவிர்த்திடுவோம்
அறிவியலின் பயன்களைநாம்
ஆக்கத்துக்கே ஆக்கிடுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 34. வீட்டுத்தோட்டம் செய்வோம்


தானியங்கள் செய்வோம்
தாராளமாய் உண்போம்
ஊட்டச் சத்து யாவும்பெற்று
சுகநலமாய் வாழ்வோம்.

மரக்கறிகள் நடுவோம்
மனம்நிறைய உண்போம்
நோய்எதிர்ப்பு சக்திபெற்று
ஆரோக்கியம் காண்போம்.

பழமரங்கள் நடுவோம்
பானங்கள் குடிப்போம்
இயற்கைதரும் செழுமைபெற்று
மகிழ்வுடனேவாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 35. வேண்டும்

அன்பான மனம் வேண்டும்
ஆறுதலான அகம் வேண்டும்
இனிதான சொல் வேண்டும்
ஈரமான இதயம் வேண்டும்
உண்மையான உறவு வேண்டும்
ஊக்கமான உள்ளம் வேண்டும்
எமக்கான உரிமை வேண்டும்
ஏற்றமிகு வாழ்வு வேண்டும்
ஐயங்கள் அகல வேண்டும்
ஒன்றான நிலை வேண்டும்
ஓரணியில் நிற்க வேண்டும்
ஔவியம் தவிர்க்க வேண்டும்
அஃதே நலமாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 JUN 2020

13185CC

KOHA
JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகடிக்கும் சிட்டுக்கள்

**செ. அன்புராசா**

அதிவேகமாக மாற்றம் அடைந்துவரும் சூழலில் இன்றைய சிறுவர்கள் சம்பந்தமான புதிய விடயங்களையும், அவர்கள் கைக்கொள்ள வேண்டிய பழமை வாய்ந்த உயர் மதிப்பீடுகளையும் அழுத்திக் கூறுபவையாக இச்சிறுவர் பாடல்கள் அமைந்திருக்கின்றன. சிறுவர்களின் உலகை மகிழ்விப்பதாகவும், அவர்களில் நேர்மறைச் சிந்தனையை ஏற்படுத்து வதாகவும், ஆளுமைத் திறன்களை வளர்ப்பதாகவும் இவை மிளிர்கின்றன. செயலூக்கம் உள்ள சிறுவர்களை உருவாக்க இந்நூல் துணைபுரியும்.



செபமாலை அன்புராசா (1970): தனது டிப்ளோமா, இளமாணி பட்டங்களை முறையே உரோமை ஊர்பானியா பல்கலைக் கழகத்திலும், முதுமாணிப் பட்டத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பெற்றவர். 18 ஆண்டுகளாக அருள்பணியாளராக பணியாற்றிவரும் இவர், ஆன்மீகப் பணிகளுக்கு நிகராக மனிதநேயப் பணிகளைப் புரிபவர். இன, மத, மொழி வரையறைகளைக் கடந்து வாழ்பவர். இலக்கிய ஈடுபாடும், நீண்டகால கலைப் பாரம்பரியத்தையும் உடையவர். கருத்துச் செறிவுமிக்க எழுத்துக்களால் சமுதாய விழிப்புணர்வை ஊட்டி வருபவர். செயலார்வத்தைத் தூண்டக்கூடிய கருத்தமர்வுகளையும், எழுச்சியூட்டும் உரைகளையும் நிகழ்த்தும் ஆற்றல் பெற்றவர். இதுவரையில் 09 நூல்களையும், 05 இறுவட்டுக்களையும் வெளியீடு செய்திருப்பவர்.

ISBN 978-955-4609-01-3
9 789554 609013

முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்

விடயம் : சிறுவர் இலக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org